# சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
# வருடாந்த கணக்கறிக்கை - 2013

Invest in Sri Lanka Tourism

Sri Lanka Tourism
Development Authority

2014 மார்ச் 10

2014 ஜுலை 17

**கௌரவ பசில் ராஜபக்ஷ, பா.உ.,**
**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.**

கௌரவ அமைச்சர்,

## சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2005 ஆம் ஆண்டின் இலக்கம் 38 கொண்ட சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் 23 (1) பிரிவுக்கு அமைய சுற்றுலா அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இந்நிதியத்தின் நிதி சுற்றுலா அபிவிருத்தி மற்றும் முன்னேற்றங்களுக்காகச் செலவிடப்பட வேண்டும். இந்நிதியத்திற்காக நிதிசேகரித்தல் மற்றும் விநியோகம் 2003 இலக்கம் 25 கொண்ட நிதிசட்டம் மற்றும் 2005 இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டத்திற்கு அமைய தீர்மானிக்கப்படுகிறது.

இலங்கை சுற்றுலா சபை சட்டத்தில் 23 (2) வாசகத்திற்கமைய புறப்படுகை வரியில் 1/3 பகுதி சிவில் விமான சேவை அதிகார சபையினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்படுவதுடன், சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு மேலும் சுற்றுலாத் துறைக்குரிய நிறுவனங்களில் காலாண்டு அடிப்படையில் சுற்றுலா அபிவிருத்தி வரியும் இந்நிதியத்தில் சேர்க்கப்படுகின்றது.

2013 ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையான கால எல்லைக்குரிய சுற்றுலா அபிவிருத்தி நிதி மூலங்களின் மொத்தம் ரூபா 2625.1 மில்லியன் ஆகும். 2012 ஆம் ஆண்டில் இந்நிதியின் அளவு 1974.8 மில்லியன் ஆகும்.

இவ்வறிக்கையின் மூலம் 2013 ஆம் ஆண்டுக்காக சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு நிதி சேகரித்தல் மற்றும் நிதிவழங்கல் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்படிக்கு,
நம்பிக்கையுள்ள,

ஒப்பம்.

விபுல வனிகசேகர,
பதில் பணிப்பாளர் நாயகம்,
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை.

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள் | 01 |
| நிதி செயற்சாதனைகள் தொடர்பான வெளிப்பாடுகள் | 02 |
| நிதிப் பாய்ச்சல் கூற்று | 03 |
| கணக்குகளுக்குரிய குறிப்புக்கள் | 04-07 |

## சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
## நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள்
## 2013 டிசம்பர் 31 ஆந் திகதியன்று

| | குறிப்பு இல | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் | | 822,889,099.72 | 278,352,579.52 |
| கிடைக்க வேண்டிய நிதி | **8** | 633,886,904.04 | 401,496,310.67 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,456,776,003.76** | **679,848,890.19** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய நிதி வகைகள் | **9** | 3,890,830.99 | 2,068,724.71 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | | 203,403,924.19 | 94,889,223.17 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | | 1,017,019,620.94 | 474,446,115.84 |
| இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | | 174,346,220.73 | 81,333,619.86 |
| இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம் | | 58,115,406.91 | 27,111,206.62 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,456,776,003.76** | **679,848,890.19** |

**டீ. எஸ் ஜயவீர**
**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

**பீ.என்.திசாநாயக்க**
**பணிப்பாளர் / நிதிமுகாமை**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

**பாஸ்பர எஸ். குணரத்ன**
**தலைவர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

# சுற்றுலா அபிவிருத்தி நிதியம
## நிதிச் செயற்சாதனை வெளிப்பாடுகள்
### 011 டிசம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்பு இல | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | |
| வரி | **3** | 2,619,040,948.38 | 1,971,124,560.78 |
| ஏனைய வருமானம் | **4** | 6,099,936.95 | 3,749,067.37 |
| **மொத்தவருமானம்** | | **2,625,140,885.33** | **1,974,873,628.15** |
| **செலவினம்** | | | |
| நிதியத்தின் நிர்வாகச் செலவினம் | **5** | 5,193,657.45 | 4,162,318.08 |
| நிதிச் செலவினம் | **6** | 5,943.00 | 7,192.86 |
| நிதியத்தின் விநியோகம் | **7** | 2,619,941,284.88 | 1,970,704,117.21 |
| **மொத்தசெலவினம்** | | **2,625,140,885.33** | **1,974,873,628.15** |
| **மிகை (குறைவு) காலஎல்லைக்காக** | | **-** | **-** |

**சுற்றுலா அபிவிருத்தி நிதியம**
**நிதிப்பாய்ச்சல் கூற்று**
**2011 டிசம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான**

| | 2013 ரூபா |
|---|---|
| **செயற்பாடுகள் ஊடான நிதிப் பாய்ச்சல்** | |
| தேறியமிகை (குறைவு) செயற்பாடுகள் ஊடாக | - |
| **செயற்பாட்டு மூலதனவித்தியாசம் - நிதிஉட்பாய்ச்சல் (வெளிப்பாய்ச்சல்)** | |
| அதிகரிப்பு / குறைவுநிதிகிடைப்பனவு | 776,927,113.57 |
| அதிகரிப்பு / குறைவுநிதிகொடுப்பனவு | (232,390,593.37) |
| செயற்பாடுகள் ஊடானதேறியநிதிப் பாய்ச்சல் | 544,536,520.20 |
| **ஆரம்பகாலஎல்லைக்கானநிதிமற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | **278,352,579.52** |
| **இறுதிகாலஎல்லைக்கானநிதிமற்றும் நிதிக்குச் சமமானவைகள** | **822,889,099.72** |

## கணக்குகளுக்குரிய குறிப்புக்கள்

### 1. சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2005 ஆம் ஆண்டு இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டவாசக இலக்கம் 23 (1) இன் கீழ் சுற்றுலா அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிதியம் சுற்றுலாத் துறையின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு நிதி சேகரித்தல் மற்றும் வழங்கல் 2003 இலக்கம் 28 கொண்ட நிதிச் சட்டம் மற்றும் 2005 இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டத்திற்கு அமைய மேற்கொள்ள வேண்டும்.

### 2. கணக்கீட்டுத் தேவைகள்

இந் நிதியக் கணக்கு தயாரிப்புக்கள் இலங்கை அரச தொழில் முயற்சி கணக்கீட்டுத் தரம் இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது..

### 3. வரி – நிதியத்தின் வளம்

| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|
| புறப்படுகை வரி | 1,604,887,048.67 | 1,161,685,657.02 |
| சுற்றுலா அபிவிருத்தி வரி | 1,014,153,899.71 | 809,438,903.76 |
| **மொத்தம்** | **2,619,040,948.38** | **1,971,124,560.78** |

### 3.1 புறப்படுகை வரி

சுற்றுலா சட்டத்தின் 23(2) (அ) வாசகத்தின் கீழ் புறப்படுகை வரியில் இருந்து 1/3 பகுதி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு சிவில் விமான சேவை அதிகார சபையினால் செலுத்தப்படுகின்றது.

| புறப்படுகை வரி | ரூபா |
|---|---|
| 2013 ஜனவரி தொடக்கம் ஒக்டேபர் வரை புறப்படுகை வரிக் கிடைப்பணவு | 1,320,912,601.71 |
| 2013ம் ஆண்டுக்கு கிடைக்க வேண்டிய புறப்படுகை வரி (ஒதுக்கீடு) | 281,698,177.87 |
| 2012ம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மாற்றங்கள் | 2,276,269.09 |
| **2013ம் ஆண்டுக்கான மொத்த புறப்படுகை வரி** | **1,604,887,048.67** |

- 2012ம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட மாற்றம் ரூபா. 2,276,269.09 அளவு இவ் ஆண்டின் மிகை / குறைவாக நிதி செயற்சாதனை குறிப்பில் இனங்காணப்பட்டுள்ளது.

### 3.2. சுற்றுலா அபிவிருத்தி வரி

2003 இல. 28 கொண்ட நிதிச் சட்டத்தின் கீழ் சுற்றுலாத் துறையின் கீழுள்ள சகல நிறுவனங்களும் சுற்றுலா அபிவிருத்தி வரியினைச் செலுத்த வேண்டும் இச்சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தினைச் சேகரித்தல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் வைப்பிலிடப்படுகிறது. 2013 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான கால எல்லைக்குள் சேகரிக்கப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வரி அளவு 580.60 மில்லியன் ரூபாவாகும். மேலும் 2013 ஒக்டோபர் - டிசம்பர் வரை புறப்படுகை வரியாக 352 மில்லியன் நிதி மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

| **சுற்றுலா அபிவிருத்தி வரி** | **ரூபா** |
|---|---|
| | |
| 2013 ஜன. - டிச. வரையில் கிடைக்கப் பெற்ற மூலங்கள் | 580,691,090.74 |
| 2013 ஒக்டோபர் - டிசம்பர் வரையில் கிடைக்கப் பெற்ற மூலங்கள் (மதிப்பீடு செய்யப்பட்ட) | 352,000,000.00 |
| 2012ம் ஆண்டுக்கான மதிப்பீட்டு மாற்றம் | 81,747,020.86 |
| சுற்றுலா அபிவிருத்தி வரி மீள் கொடுப்பனவு | (284,211.89) |
| **2013 ஜனவரி - டிசம்பர் வரை சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம்** | **1,014,153,899.71** |

### 3.2.1 முன்னைய ஆண்டின் வருமானம்

மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 208,000,000.00 அளவு 2012ம் ஆண்டுக்காக கிடைக்க வேண்டும். இருப்பினும் உண்மையான கிடைப்பணவு மாற்றம் ரூபா. 289,747,020.86 நிதி அளவு உரிய கால எல்லைக்குள் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கமைய 2013 கணக்குகளுக்கிணங்க இந் நிதிப் பெறுமதி இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கமைய கணக்கு மதிப்பீட்டு மாற்றங்கள் தற்போதைய கால எல்லையில் வருமானமாக கருதப்பட்டுள்ளது.

## 4. ஏனைய வருமானம்

ஏனைய வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டுள்ள பெறுமதி உள்ளடக்கியிருப்பது நிதி சட்டத்திற்கமைய உரிய தினத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாது பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் தமது கொடுப்பணவிற்கமைய அறவிடப்பட்ட வட்டி வருமானம் மற்றும் மறுக்கப்பட்ட காசோலைகளுக்காக பெறப்பட்ட மிகை கிடைப்பணவு அளவாகும்

**ரூபா**

| | |
|---|---|
| 2013ம் ஆண்டுக்காக தாமத வட்டி சேகரிப்பு | 6,099,589.95 |
| மிகை கிடைப்பணவு / மறுக்கப்பட்ட காசோலை | 347.00 |
| **மொத்தம்** | **6,099,936.95** |

**5. நிதியத்தின் நிர்வாகச் செலவினம்**

| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|
| முத்திரைக் கட்டணம் | 63,250.00 | 68,390.35 |
| நிருவாகச் செலவினம் | 5,101,267.45 | 4,064,827.73 |
| கணக்காய்வுக் கட்டணம் | 29,100.00 | 29,100.00 |
| தபால் கட்டணம் | 40.00 | - |
| **மொத்தம்** | **5,193,657.45** | **4,162,318.08** |

**6. நிதிச் செலவினம்**

| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|
| வங்கிக் கட்டணம் | 5,943.00 | 7,192.86 |
| **மொத்தம்** | **5,943.00** | **7,192.86** |

**7. நிதியத்தின் விநியோகங்கள்**

2005 இல. 38 கொண்ட சுற்றுலா சட்டத்தின் 24 (8) வாசகத்துக்கு அமைய நிதியத்தின் விநியோகங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்டன.

| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 366,791,779.88 | 275,898,576.41 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | 1,833,958,899.42 | 1,379,492,882.05 |
| இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 314,392,954.19 | 236,484,494.07 |
| இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம் | 104,797,651.40 | 78,828,164.69 |
| **மொத்தம்** | **2,619,941,284.88** | **1,970,704,117.21** |

**8. கிடைக்க வேண்டி நிதி வகைகள்**

| | **2013** | **2012** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கிடைக்க வேண்டிய புறப்படுகை வரி | 281,698,177.87 | 190,184,578.80 |
| கிடைக்க வேண்டிய சுற்றுலா அபிவிருத்தி வரி | 352,000,000.00 | 208,000,000.00 |
| கடன்படுநர் | 188,726.17 | 3,311,731.87 |
| **மொத்தம்** | **633,886,904.04** | **401,496,310.67** |

**9. செலுத்த வேண்டிய நிதி மூலங்கள்**

| | **2013** | **2012** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| திரண்ட செலவினம் - நிர்வாகக் கட்டணம் | 3,761,568.99 | 1,990,349.71 |
| திரண்ட செலவினம் - கணக்காய்வுக் கட்டணம் | 29,100.00 | 58,200.00 |
| திரண்ட செலவினம் - முத்திரைக் கட்டணம் | 47,125.00 | 20,175.00 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 53,037.00 | - |
| **மொத்தம்** | **3,890,830.99** | **2,068,724.70** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. ரீஎம் 2/கே/ரீடீஎப்/1/13/02

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2014 யூன 30

தலைவர்,

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் 24(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | சுற்றுலா வரி அறவிடும் அறிக்கை சுற்றுலா அபிவிருத்தி வரி (சு.அ.வ) அறவிடப்பட்டு 30 நாட்களுக்குள் பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும். எவ்வாறெனினும், நிதியம் இந் நியதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச் சட்டம் | |
| (i) 24(3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியை முகாமைத்துவப்படுத்துவதற்கும் நிர்வகிப்பதற்குமான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 24(8) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ள சகல நிதிகளும் உரிய நிறுவகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கில் ரூபா 822,889,100 தொகையான பணம் பகிர்ந்தளிக்கப்படுவதற்காகக் காணப்பட்டது. |
| (இ) | 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) ஆம் உப பிரிவு | இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் கப்பலில் இலங்கையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு பயணிக்காகவும் வழங்கப்படும் ஒவ்வொரு கப்பற்சீட்டிலிருந்தும் வரி அறவிடப்பட்டு இதில் ஒரு பகுதி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து வரி அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிராததுடன் கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து அறவிடப்படாமைக்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிதிப் பிரமாண இல 486 | 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரித்தான 7 மறுக்கப்பட்ட காசோலைகளின் ரூபா 143,504 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளால் ஈட்டிய வருமானம் ரூபா 2,625 மில்லியனானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா

1,975 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 650 மில்லியன் தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 443.2 மில்லியனாலும் குடியகல்வு வரி வருமானம் ரூபா 204.7 மில்லியனாலும் அதிகரித்தமையே நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிமீளாய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் வருமானம் ரூபா 2,625 மில்லியன் தொகையானதுடன் அதனை முன்னைய ஆண்டின் ரூபா 1,975 மில்லியன் தொகையுடன் ஒப்பிடப்படுகையில் 32.9 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது. இவ்வாறே முன்னைய ஆண்டின் நிதியத்தின் நிர்வாகத்திற்காகச் செலவிடப்பட்ட ரூபா 4 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது இதற்காக ரூபா 5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் படி நிர்வாகச் செலவினம் 25 சதவீத அதிகரிப்பைக் காண்பித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்

#### 4.1.1 நிதிய முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதியத்தால் நிர்வாகச் செலவினமாக ரூபா 5,193,657 தொகை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்வாகச் செலவினக் கொடுப்பனவிற்கு 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கவில்லை.

(ஆ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2003 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 1303/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குடியகல்வு வரியாக வானூர்தி மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்து 15 ஐக்கிய அமெரிக்க டொலர்களும் கப்பல் மூலம் வெளிச்செல்லும்

சகலரிடமிருந்து 2.5 ஐக்கிய அமெரிக்க டொலர்களும் அறவிடப்பட வேண்டிய போதிலும் இக் குடியகல்வு வரியை அறவிடும் சிவில் விமானச் சேவைகள் சேவை பணிப்பாளர் நாயகத்தால் 2004 முதல் 2012 திசெம்பர் 31 வரை ஒரு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ரூபா 100 எனும் அந்நிய செலாவாணிப் பரிமாற்ற அடிப்படையில் இவ் வரி அறவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிலும் இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய குடியகல்வு வரி குறிப்பிடத்தக்களவு கிடைக்காது போயிற்று. அது ஆண்டொன்றிக்கு ஏறக்குறைய ரூபா 400 மில்லியன் வரையிலானது எனப் புலனாகியது.

(இ) சுற்றுலா அபிவிருத்தி வரியை அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான தரவு நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒவ்வொரு ஆண்டிலும் அறவிடப்பட்ட வரி மற்றும் நிறுவனங்களது விற்பனை வருமானம் என்பன பதிவு செய்யப்படாமையால் நிலுவையான வரி தொடர்பாக ஒழுங்குமுறையொன்று இருக்கவில்லை.

(ஈ) 2003 திசெம்பர் 11 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆம் 4 ஆம் பந்திகளிலுள்ள நியதிகளின் பிரகாரம், அபிவிருத்தி வரித் தொகை செலுத்தப்பட்டிராமை காரணமாக விதிக்கப்படும் தண்டப்பணம் போதாமையால் அதிகாரசபைக்கு நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) 2013 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் விமானக் கம்பனியால் குறித்த காலப்பகுதியின் போது வரி செலுத்தப்பட்டிராத சந்தர்ப்பங்களில் குறித்த தண்டப்பண வட்டியுடன் அப் பணம் அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டதா என்பதற்கான உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள், 2014 மார்ச் 14 ஆம் திகதயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்களுடன் (முரண் வீச்சு 9 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை) கூடிய 03 விடயங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டமையைக் காண முடியாதிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிகளை பகிர்ந்தளித்தல்

(இ) சுற்றுலா அபிவிருத்தி வரிச் சேகரிப்பு

(ஈ) குடியகல்வு வரிச் சேகரிப்பு

(உ) அனுமதிப்பத்திரமுடைய நிறுவனங்களின் நிதிஅறிக்கைகளின் மீளாய்வு

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*Ms/v*